ஏற்படும் வகையில், இன்டர்-டிஸ்டிரிக்ட் மூவ்மெண்ட், இண்டர்-டாலுக் மூவ்மெண்ட், இன்னும் இண்டர் பிர்க்கா மூவ்மெண்ட் இவற்றை நீக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. எப்படி இரண்டு கண்களையும் சமமாக பாதுகாக்க வேண்டுமோ அதே விதத்தில், ஸ்டாசுடரி ரேஷன் ஏரியா, கார்டு லிஸ்டமுள்ள இடங்கள் அதோடு மற்றப் பகுதியில் உள்ள மக்களையும் கண்காணிக்க அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உணர்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா-கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பற்றியது. கோயம்புத்தூர் மாவட்டம்பற்றி வினாவைப் போடுங்கள்.

திரு தோ. மு. நல்லசாமி : கோயம்புத்தூர் பற்றி இருந்தாலும் இதுவும் பொருந்தும் மற்ற மாவட்டங்களுக்கும். பொதுக் கேள்வியாக எடுத்துக் கொண்டாலும் சரி, கோயம்புத்தூர் கேள்வியாக எடுத்துக் கொண்டாலும் சரி.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் என்ன காரியத்திற்காக நடைபெறுகிறது என்று சொல்லுகிறார்களோ அது இல்லை. கனம் உறுப்பினர் சட்டப் பூர்வமான ரேஷன்முறை இருக்கும் இடங்களுக்கும், குடும்பக் கார்டு இருக்கும் இடங்களுக்கும்தான் பயன்படும் என்கிறார்கள். அந்த வகையில் ஏற்படுத்தப்படவில்லை. வேளாண்மை இல்லாத இடங்களில் இன்னும் தொழிலாளர்களாக இருக்கும் இடங்களில், பர்ச்சேசிங் பவர் அதிகமாக இருக்கும் இடங்களில் மக்களுக்கு இன்ஸுலேட் செய்ய வேண்டும் என்கிற காரியத்திற்காக ரேஷன் முறை வந்திருக்கிறது. அந்த முறை இல்லாவிட்டால், கிராமப் புறங்களில் அதிக விலையேறி அவர்களுக்கு பிரதிகூலம் வரக்கூடாது என்கிற காரணத்திற்காகத்தான் இது செய்யப்படுகிறது. மற்ற கண்ணும் பார்த்துக் கொள்ளப்படுகிறது இப்பொழுது இருக்கும் ஏற்பட்டால் என்பதைத் தெரிவிக்கிறேன்.

General Sales Tax Act

*282 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal to review the Madras General Sales Tax Act in view of the second amendment 1966 which gives scope for arbitrary assessment ousting the jurisdiction of the courts in cases of penal assessment ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

Thiru K. VINAYAKAM : Because of the Second Amendment Act of 1966 which gave scope to the assessing authority to assess arbitrarily, apart from taking away the jurisdiction of the Court, is theMinister aware of the fact that a lot of hardships is experienced by the assessees and that the arbitrary amount fixed by the authorities as the turnover is far in excess of the actual turnover ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The Government does not agree with views of the hon. Member.

மு.ப. 10-00 *283 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether it is a fact that the Supreme Court has struck down Rule 21-A framed under the Madras General Sales Tax Act,authorising the authorities to collect sales tax from the transferee of a business in respect of certain earlier arrears of tax due by the transferor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு தொழில் குறித்துச் செலுத்தவேண்டிய விற்பனைவரியை, அத்தொழிலை இன்னொருவரிடமிருந்து தம் பெயருக்குமாற்றிக் கொண்டவரிடமிருந்து வசூலிப்பது குறித்து